# ஆண்டவரின் விண்ணேற்பு விழா

# திருவழிபாடு ஆண்டு - C

# 2025-06-01

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 1: 1-11,*

*திருப்பாடல்கள் 47: 1-2. 5-6. 7-8 (பல்லவி: 5*b),

*தூய பவுல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் - 9;24-28 10;19-23,*

*லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 46-53)*

**திருப்பலி முன்னுரை**

*விண்ணகத்துக்குரியவர்களே, ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசு, நாற்பது நாட்கள் தனது சீடர்களை சந்தித்து உறுதிபடுத்திய பின்பு விண்ணேற்றம் அடைந்து தந்தையாம் இறைவனிடம் செல்கிறார். தூய ஆவியாரின் துணையோடு உலகெங்கும் நற்செய்தியை பறைசாற்றி, கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம். முதல் கிறிஸ்தவர்களைப் போன்று, ஆண்டவரின் மாட்சியை பிறருக்கு அறிவிக்க இயேசு நம்மை அழைக்கிறார். ஆண்டவருக்கு சான்று பகரும் வகையில் மனந்திரும்பிய புதுவாழ்வு வாழ, இத்திருப்பலியில் நாம் மன்றாடுவோம்.*

முதல் வாசகம்

*எங்கள் கண்கள் முன்பாக, இயேசு மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார்.*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 1: 1-11*

*தெயோபில் அவர்களே, இயேசு தாம் தெரிந்துகொண்ட திருத்தூதர்களுக்கு அவர்கள் தூய ஆவியின் துணையோடு செய்ய வேண்டியவற்றைக் குறித்து அறிவுறுத்தியபின் விண்ணேற்றமடைந்தார். விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் செய்தவை, கற்பித்தவை யாவற்றையும் குறித்து எனது முதலாம் நூலில் நான் எழுதினேன். இயேசு துன்புற்று இறந்தபின்பு நாற்பது நாள்களாக அவர்களுக்குத் தோன்றி, இறையாட்சியைப்பற்றிக் கற்பித்தார்; பல தெளிவான சான்றுகளால் தாம் உயிரோடிருப்பதைக் காண்பித்தார். அவர்களோடு சேர்ந்து உண்ணும்போது அவர்களிடம், "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள். யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாள்களில் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்" என்று கூறினார். பின்பு அங்கே கூடியிருந்தவர்கள் அவரிடம், "ஆண்டவரே, இஸ்ரயேலுக்கு ஆட்சியுரிமையை மீண்டும் பெற்றுத் தரும் காலம் இதுதானோ?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "என் தந்தை தம் அதிகாரத்தால் குறித்துவைத்துள்ள நேரங்களையும் காலங்களையும் அறிவது உங்களுக்கு உரியது அல்ல; ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்றார். இவற்றைச் சொன்னபின்பு, அவர்கள் கண்கள் முன்பாக அவர் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். மேகம் ஒன்று அவரை எடுத்துச் சென்று அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. அவர் செல்லும்போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அப்போது வெண்ணுடை அணிந்த இருவர் தோன்றி, "கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றம் அடைந்ததைக் கண்டீர்கள் அல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" என்றனர்.*

*- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.*

*- இறைவா உமக்கு நன்றி*

பதிலுரைப் பாடல்

*பல்லவி: எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்.*

*திருப்பாடல்கள் 47: 1-2. 5-6. 7-8 (பல்லவி: 5*b)

1 *மக்களினங்களே, களிப்புடன் கைகொட்டுங்கள்; ஆர்ப்பரித்துக் கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள். 2 ஏனெனில், உன்னதராகிய ஆண்டவர் அஞ்சுதற்கு உரியவர்; உலகனைத்தையும் ஆளும் மாவேந்தர் அவரே. - பல்லவி*

5 *ஆரவார ஒலியிடையே பவனி செல்கின்றார் கடவுள்; எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர். 6 பாடுங்கள்; கடவுளுக்குப் புகழ் பாடுங்கள்; பாடுங்கள், நம் அரசருக்குப் புகழ் பாடுங்கள். - பல்லவி*

7 *ஏனெனில், கடவுளே அனைத்து உலகின் வேந்தர்; அருட்பா தொடுத்துப் புகழ் பாடுங்கள். 8 கடவுள் பிற இனத்தார்மீது ஆட்சி செய்கின்றார்; அவர்தம் திரு அரியணையில் வீற்றிருக்கின்றார். - பல்லவி*

இரண்டாம் வாசகம்

*கிறிஸ்து விண்ணுலகிற்குள்ளேயே நுழைந்திருக்கிறார்.*

*தூய பவுல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் - 9;24-28 10;19-23*

சகோதரர் சகோதரிகளே,

*கிறிஸ்து மனிதரின் கையால் அமைக்கப்பட்டதும் உண்மையான தூயகத்திற்கு முன்னடையாளமாய் இருப்பதுமான இவ்வுலகத் தூயகத்திற்குள் நுழையாமல் விண்ணுலகிற்குள்ளேயே நுழைந்திருக்கிறார். அங்கே இப்போது நம் சார்பாகக் கடவுளின் திருமுன் நிற்கிறார். தலைமைக் குரு விலங்குகளின் இரத்தத்துடன் ஆண்டுதோறும் தூயகத்திற்குள் செல்வார். அதற்கு மாறாக, கிறிஸ்து தம்மையே ஒரே முறை பலியாகக் கொடுத்தார். அதை மீண்டும் மீண்டும் செய்யவில்லை. அவ்வாறு செய்திருப்பாரென்றால், உலகம் தோன்றிய காலந்தொட்டு, அவர் மீண்டும் மீண்டும் துன்புற்றிருக்கவேண்டும். அதற்கு மாறாக, உலகம் முடியும் காலமான இப்போது தம்மையே பலியாகக் கொடுத்து, பாவங்களைப் போக்குவதற்காக ஒரே முறை உலகில் வெளிப்படுத்தப் பட்டார். மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கென உள்ள நியதி. அவ்வாறே, கிறிஸ்துவும் பலரின் பாவங்களைப் போக்கும்பொருட்டு ஒரே முறை தம்மைத்தாமே பலியாகக் கொடுத்தார். அவர் மீண்டும் ஒரு முறை தோன்றுவார். ஆனால், பாவத்தின் பொருட்டு அல்ல, தமக்காகக் காத்திருப்பவர்களுக்கு மீட்பு அருளும்பொருட்டே தோன்றுவார். சகோதரர் சகோதரிகளே, இயேசுவின் உடலைக் கோவிலின் திரைச் சீலைக்கு ஒப்பிடலாம். இத்திரைச்சீலை வழியாகத் திருத்தூயகத்திற்குள் நுழைய நமக்குத் துணிவு உண்டு. ஏனெனில் அவர் இரத்தம் சிந்தி நமக்கெனப் புதியதொரு வழியைத் திறந்து வைத்துள்ளார். இதுவே வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் வழி. மேலும் கடவுளுடைய இல்லத்தின்மீது அதிகாரம் பெற்ற பெரிய குரு ஒருவர் நமக்கு உண்டு. ஆதலால், தீய மனச்சான்றிலிருந்து விடுவிக்கப்பட்ட உள்ளமும் தூய நீரில் கழுவப்பட்ட உடலும் உடையவர்களாய், நேரிய உள்ளத்தோடும் மிகு உறுதியான நம்பிக்கையோடும் அவரை அணுகிச் செல்வோமாக. நமக்கு வாக்களித்தவர் நம்பிக்கைக்கு உரியவர்.*

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு

- இறைவா உமக்கு நன்றி

*நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி*

*அல்லேலூயா, அல்லேலூயா! மத் 28: 19-20*

*அல்லேலூயா, அல்லேலூயா! நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா. அல்லேலூயா*

*நற்செய்தி வாசகம்*

*லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 24: 46-53*

*அக்காலத்தில் இயேசு தம் சீடர்களிடம், ''மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும், 'பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்' என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும் என்றும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள். இதோ, என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்'' என்றார். பின்பு இயேசு பெத்தானியாவரை அவர்களை அழைத்துச் சென்று தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கினார். அவர்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டிருந்தபோதே அவர் அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணேற்றம் அடைந்தார். அவர்கள் அவரை வணங்கிவிட்டுப் பெருமகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பிச் சென்றார்கள். அவர்கள் கோவிலில் எப்போதும் கடவுளைப் போற்றியவாறு இருந்தார்கள்.*

*- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.*

*- கிறிஸ்துவே உமக்கு புகழ்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தெளிவின் தேறலே எம் தந்தையே!

உம் மகத்துவமான திருமகன் இயேசுவை உயிர்த்தெழச் செய்து அவரது உயிர்ப்பால் பலரைத் தேற்றினீர். எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்களை உம் திருமுன் சமர்ப்பணம் செய்கின்றோம். இவர்களைத் தூய ஆவியால் தேற்றி, உயிர்ப்பில் உன்னத எடுத்துக்காட்டுக்களாய் வாழ வரமருள இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

இறைவா!

தூய ஆவியின் உடனிருப்பை எமக்குத் தடையின்றித் தாரும். ஊக்கமுடன் உலகின் கடையெல்லைவரை உயிர்த்த இயேசுவின் உரமான சாட்சிகளாக மிளிர்ந்திடத்துணை செய்ய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

இறைவா! எம் தந்தையே!

இயேசு ஆண்டவர் மீதான எம் நம்பிக்கையை இன்னும் உறுதிப்படுத்தும். நேரிய உள்ளத்தோடு, பிழையறா மாண்புடன் எம்மவரை, எமது உயிரானவரை நாங்கள் அணுகி வர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

இறைவா!

வாழ்வினில் விரக்தி, இயலாமை, ஏற்றத்தாழ்வுகளால் அல்லலுறும் மானிடத்தை உம்பால் சமர்ப்பிக்கிறோம். இவர்களில் சமநிலையை, சாயாத்தன்மையை நிலைபெறச் செய்து இயேசுவோடு இன்புற்று வாழ வரமருள இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

இறைவா!

எமதாண்டவர் வாக்களித்திட்ட துணையாளரை எம்மில் நிறைவாகப் பொழிந்தருளும், அவரால் ஆக்கமும் ஊக்கமும் பெற்று, பெருமகிழ்வுடன் உம் திருமகன்! வழியாக உம்மைப் போற்றிப் புகழ இறைவா, உம்மை வேண்டுகிறோம்.

வாழ்வின் துணையாம் இறைவா,

நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

மேன்மைமிகு அரசராம் இறைவா,

பிற சமயத்தினரின் அவமதிப்புகளை பொருட்படுத்தாமல், உலகெங்கும் வாழும் மக்களுக்கு உம் திருமகனது உயிர்ப்பின் நற்செய்தியைக் கொண்டு சேர்க்கும் கருவிகளாக கிறிஸ்தவர்கள் அனைவரையும் உருமாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இன்றைய சிந்தனை

"உங்களுக்கு அமைதி உரித்தாகுக!"

இயேசுவின் உயிர்ப்பு பலருக்கும் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பலவித உணர்வுகளுக்கு மத்தியில் அத்தனை திருத்தூதர்களும் பரிதவித்துள்ளர். இன்றைய வாசகப் பகுதியில அவர்களின் பல்வேறு உணர்வுகளும் வெளி ப்படுத்தப்படுகின்றன. திகில், அச்சம், கலக்கம், ஐயம், அமைதி, மகிழ்ச்சி ஆகிய உணர்வை வெளிப்படுத்தும் சொற்றொடர்களும், பாருங்கள், தொடுங்கள், உண்ணுங்கள்,என்னும் சொற்றொடர்கள் வெளிப்படுத்தும் உணர்வுச் செயல்களும் இயேசுவின் உயிர்ப்புக்கு வழங்கும் நிஜ வடிவின் உணர்வுப்பூர்வமரன சான்றுகள். இயேசுவின் உயிர்ப்பு அவரது உயிர்புபற்றிய எல்லா சந்தேகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறது. அவரது உயிர்ப்பு என்பது ஆவி உலக வாழ்வு அல்ல; இவ்வுலகில் வாழும் முழு மனித வாழ்வு; உடலும் ஆவியும் உள்ள வாழ்வு. ஆகவேதான் தொட்டுப் பாருங்கள்என்றார். அவர்களோடு உண்டார். மனிதனின் எல்லா உணர்வுப்பூர்வ சந்தேகங்களுக்கும் தீர்வை வழங்குகிறார் இயேசு.

நம் இறைவன் இயேசு நம் வாழ்வின் சந்தேகங்கள் சிக்கல்கள் அனைத்திற்கும் தீர்வு வழங்குபவர். நம் வாழ்வின் பயம், அச்சம், கலக்கம் இவை அனைத்தையும் அகற்றுவார். நம்மோடு உண்டு உறையாடி நம்மை மகிழ்விப்பவர் நம் இறைவன். அந்த அன்பு தெய்வம் நம்மோடு உண்டு உறையாடிட இடம் கொடுப்போம். நம் கவலை எல்லாம் நீங்கும். அச்சம் அகலும். அமைதி அதிகரிக்கும். இனிது வாழ்வோம். வாழ்த்துக்கள். ஆமேன்.

மன்றாட்டு:

விண்ணகம் சென்று தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கும் இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம். நீர் எங்களுக்கு இடம் தயாரிப்பதற்கு முன்னேற்பாடாக விண்ணகம் சென்றுள்ளீர். தந்தையிடம் எங்களுக்காகப் பரிந்துபேசி, நாங்கள் விண்ணுக்குரியவர்களாக வாழும் வரத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகின்றோம்.